ஓம் சரவணஜோதியே நமோ நம

ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து ஓங்காரக்குடிலின் விழாவிற்கும் அரங்கமகா ஞானியரின் குரு பூஜை விழாவில் நிகழ்வின் அற்புதங்களையும் அன்பர்கட்குண்டான நிறைவும் இதுகுறித்த ஆசி விளக்கம்

**ஆசான் அரங்கமகா ஞானியரின் குரு பூஜை ஆசி விளக்கம்**

14.05.2025

1. அருள் வடிவாக நின்று காத்தருளும்
ஆறுமுகப் பெருமானை தொழுதேற்றி
வரமென அரங்கமகா ஞானியர் யானும்
வழங்குவேன் என் தொண்டர் பெருமக்கள் கேட்க

2. கேட்கவே ஓங்காரக்குடிலின் விழா நிகழ்வு குறித்தும்
தொண்டர்களின் நிறைவு குறித்தும்
விழாவில் நடந்த சூட்சும விஷயங்கள் குறித்தும்
அரங்கன் யான் அன்பர்கள் மனம்மகிழ இனிதே

3. இதுகாலம் ஆசி சூட்சும விளக்கமாக தருவேன்
வகைபட ஓங்காரக்குடிலின் நிர்வாகமும்
உயர் தொண்டர் பெருமக்களெல்லாம்
அரங்கன் எந்தன் ஓங்காரக்குடிலின்

4. இரு விழாவையும் பெருவிழாவாக நடத்தி
குரு அரங்கன் என் அருளை
திருவருளாகவே பெற்றுவிட்டனர்
இவ்வித விழாவில் அரங்கன் யான்

5. பரிபூரணமாய் மகிழ்ந்து அன்பர்களுக்கும்
தொண்டர்கட்கும் உலக மக்களுக்கும்
நிர்வாக உயர் அன்பர்கட்கும்
மனமகிழ்ந்து ஆசி தந்துள்ளேன்

6. உள்ளபடி இவ்விழாவில் சூட்சுமமாய்
அமுதிலும் அன்பர்களுடைய தொண்டு கலந்த
சேவைகள் அத்துணையிலும்
யானே கலந்து முழுமை தந்துள்ளேன்

7. அன்னதனால் என் தொண்டர் பெருமக்கள்
தொண்டாற்றிய விதம் சிறப்பு
ஓங்காரக்குடிலின் நிர்வாகத்தின் பாங்கு சிறப்பு
உயர்வுபட தர்மமும் சிறப்பாக நடந்து

8. அளவிலா வண்ணம் மக்கள் படைகளும்
வந்து குவிந்து என் அனுகூலத்தையும்
எந்தனுடைய ஆசியும் காட்சியும்
பரிபூரணமாக முழுமைபட மகிழ்ந்து

9. ஏற்று கொண்டு சென்றுள்ளனர்
உள்ளபடி விழா மிக
சிறப்பாகவே நடந்தேறியது
அரங்கன் யான் மகிழுகின்ற வண்ணம்

10. மக்கள் படை குவிந்து
அன்னதானத்தின் அளவும் மிகுந்து
சுவை குன்றாத வண்ணம்
அருமருந்தாகவே மேலவர்களெல்லாம்

11. சூட்சுமமாய் ஆசி தர
குடில் அமுதும் சுவை கூடி
உலகோர் பிணி நீக்கும்
அருமருந்தாக விளங்கியது

12. அன்னதனால் தர்மமும் மிகச்சிறப்பு
தொண்டர்களின் தொண்டும் மிகச்சிறப்பு
நிர்வாகத்தின் பாங்கும் மிக உயர்வு
வகைபட வந்து சென்றோர்களெல்லாம்

13. மனம் மகிழ்ந்தும் குளிர்ந்தும் சென்றுள்ளனர்
அப்பனே எந்தன் குருபூஜை விழா
மேலவர்களெல்லாம் மெச்சும்படியும் மகிழும்படியும்
ஆறுமுகன் அகமகிழ்ந்து அருளும்படியும்

14. அற்புதமாய் விழா நடந்தேறியுள்ளது
அரங்கன் யான் மகிழ்ந்தேன்
தொண்டர்கட்கு அளவிலா வண்ணம்
வரமும் தந்துள்ளேன்

15. உள்ளபடி இந்தவித நன்னாளில்
உயர்வுபட தொண்டர்களெல்லாம்
வெகுவாக சிரத்தை கொண்டு
முழுமனதோடும் சரணாகதி கொண்டு சேவையாற்றியுள்ளனர்

16. உள்ளபடி மிகைபட வருங்காலங்களில்
மேலான வரவாக அன்னதானத்திற்குண்டான

தேவைக்கு மேலான வண்ணம்
பொருளாதார பலத்தை அரங்கன் யான்

17. குடிலுக்கு சேர்ப்பேன் உயர்வான மாந்தர்களையும்
எந்தனுக்கு பிறவித் தொடர்புள்ள செல்வந்தர்களெல்லாம்
எனை நாடி வந்து அவர்கள் வினை நீங்கவும்
அவர்கட்கு உண்டான சூட்சும

18. குறைகளெல்லாம் நீங்கவும்
அணுகக் கூடிய வழிவகை செய்து
அவர்களெல்லாம் அளவிலா வண்ணம்
என் தர்மத்தில் பங்களிக்க

19. அரங்கன் யான் வழிகாட்டுவேன்
எண்ணற்ற தொண்டர்கள் சரணாகதி கொண்டு
இன்னும் ஓங்காரக்குடிலின் சேவை
வெகுவாக விரிவடையவும் வளரவும்

20. அளவில்லா வண்ணம் அன்பர்கள் படை
பெருகவும் அரங்கன் யானே வகை செய்வேன்
அப்பனே விழா மிகச்சிறப்பாக நடந்தேறியது
இன்னும் வருகின்ற விசுவாவசு ஆண்டின்

21. ஒவ்வொரு முழுமதி பூஜை விழாவும்
இது அல்லாமல் குரு வார பூஜைகளும்
பேரற்புதம் பட நடக்க அரங்கன் யானே
அதிசயங்கள் நிகழ்த்துவேன்

22. இந்தவித விழாவில் சூட்சுமமாக
நிர்வகிக்கும் அன்பர்கட்கும்
சரணாகதி கொண்ட கிளைசங்கத்தின்
நிர்வாகிகள் தொண்டர்கள் அனைவருக்கும்

23. தேகபலம் மனபலம் பெற
அவர்கட்கு ஜனவசியமும் தனவசியமும் ஏற்பட
சூட்சும வரம் தந்துள்ளேன்
இந்த வரத்தின் மகிமை சக்தியை

24. அவரவர்கள் இரண்டொரு திங்களுக்குள்
பரிபூரணமாய் அடைந்து உணர்ந்து அதன்மூலம்
அதீத ஆற்றல் பெருகி இன்னும்
அரங்கன் என்பால் அளவிலா வண்ணம்

25. சரணாகதி கூடி சிறக்க நேரும்
அரங்கமகான் யான் இந்த விழாவில்
மிகுந்த வண்ணம் மகிழ்ந்து
என் அன்பர்கட்கு அளவிலா சக்தி ஊட்டியுள்ளேன்

26. அன்னதனால் இருவிழாவுமே
என் தொண்டர்கள் பெருவிழாவாக
எடுத்து மகிழ்வு தந்துள்ளனர்
உள்ளபடி அரங்கன் என்னொடு முருகனும்

27. அளவிலா வண்ணம் மகிழ்ந்து
ஆசிதனை அருள எனக்கு
வகை காட்டவே இந்த அருளாசியை
அரங்கன் யான் வழங்கினேன்

ஆசி விளக்கம் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி